**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 54/2018**

Prosecution witness: 3

| | |
|---|---|
| Name: குருவெங்கட்ராஜ் | Caste: |
| Father'sName: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 22.01.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது துாத்துக்குடி மாவட்டம் மணியாட்சி உட்கோட்டத்தில் காவல்துணை கண்காணிப்பாளராக பணியில் உள்ளேன். கடந்த 18.09.2017 ல் மதுரைமாவட்டம் பேரையூர்வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது சேடபட்டி காவல்நிலைய குற்ற எண்.154/2017, ச/பி.8(C) r/w 20(b)(ii)(B) NDPS Act வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். கடந்த 01.08.2017 ம் தேதி சேடபட்டி காவல்நிலைய பொறுப்பு சார்பு ஆய்வாளர் அருண்குமார் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது அவருக்கு தகவலாளி சொன்ன தகவலின் பேரில் போதைப்பொருள் தடுப்பு சம்பந்தமாக தலைமைக்காவலர்-அப்துல்ரகிம் சேட் மற்றும் கிருஷ்ணன் ஆகியோருடன் தக்க உபகரணங்களுடன் காவல் வாகனத்தில் சேடபட்டி எதிரியின் வீட்டிற்கு பின்புறம் 10.30 மணிக்கு போலீஸ்பார்ட்டியுடன் சென்று விசாரிக்க கையில்

வெள்ளைநிற பையில் கஞ்சா இருந்தது. சேடபட்டி முனியாண்டி மகன் மாயாண்டி என்று கூற தான் சேடபட்டி சார்பு ஆய்வாளர் என்று கூறி சோதனையிட அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ, அரசிதழ்பதிவு பெற்ற அதிகாரியிடம் சோதனையிட உமக்கு உரிமை உள்ளது என்று எடுத்துக்கூற தாங்களே சோதனையிடலாம் என்று கூறியதன் பேரில் உடன் அழைத்துச்சென்ற சாட்சிகள் அப்துல்ரகிம்சேட் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் 10.45 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து சோதனை செய்ய அவர் வைத்திருந்த பையில் கஞ்சா இருந்ததை தாங்கள் எடுத்துச்சென்ற தராசில் நிறுத்துப்பார்த்தபோது அது 3 கிலோ இருந்தது. மேற்படி எதிரியிடம் 11.00 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பெற்று உடன் அழைத்துசென்ற காவலர்களை சாட்சியாக வைத்து கையொப்பம் பெற்றுள்ளார். மேற்படி கஞ்சாவை சில்லரைவிற்பனைக்கு வைத்திருந்ததாகவும் அன்றைய தினம் 11.10 மணிக்கு போலீசார் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து அதில் 100 கிராம் கஞ்சாவை ரசாயன பகுப்பாய்வுக்காக தனியாக எடுத்து 50 கிராம் எடையுள்ள கஞ்சாவை பிரவுண்கலர் பேப்பரில் மடித்து வெள்ளைநூலால் கட்டி, போலீஸ்பட்டன் சீல் வைத்து அதற்கு S1, S2 எனகுறியீடு செய்து மீதம் உள்ள 2 கிலோ 900 கிராம் கஞ்சாவை வெள்ளை நூலால் கட்டி போலீஸ்பட்டன் சீல் வைத்து P1 என குறியீடு செய்து எதிரி மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.154/2017 என பதிவு செய்துள்ளார். 18.09.2017 ம் தேதி இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தை மாவட்ட முதன்மை சிறப்பு நீதிமன்றத்திற்கு காவலர்சின்னமாயன் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இரசாயன பகுப்பாய்வு செய்த பகுப்பாய்வாளர்-திரு.ராமச்சந்திரன் என்பவரிம் ஆய்வு செய்த சான்றை பெற்று வாக்குமூலம் பெற்றேன். பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அருண்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்தேன். இத்துடன் விசாரணையை முடித்து எதிரி மாயாண்டி என்பவர் மீது 8(c) u/s 20(b)(ii)(B)NDPS Act படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். காவல் ஆய்வாளர் அவர்கள் பகுப்பாய்வு செய்யக்கோரி நீதிமன்றத்திற்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.**6 ஆகும். கைப்பற்றிய சொத்தினை பகுப்பாய்வு செய்யக்கோரி வட்டரா தடய அறிவியல் ஆய்வகத்திற்கு நீதிமன்றம் அனுப்பிய கடிதம் **அ.சா.ஆ.**7 ஆகும். பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.**8 ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர். சந்தர்ப்பம் அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.